DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 64/2024** |
| Deposition of Witness for | : PW 9 |
| Name | : திரு. அந்தோணி சவரிமுத்து |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 26.02.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 26th February2026.

1ம் **எதிரி ஆஜர். 2,3 எதிரிகள் ஆஜர் இல்லை. மனு தாக்கல செய்யப்பட்டு அனுமதிக்கப்பபட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் காவல்துறையில் பணிபுரிந்து தற்போது பணி ஓய்வு பெற்று கல்லிடைக்குறிச்சியில் குடியிருந்து வருகிறேன். கடந்த 08.10.2016ம் தேதி சின்னகோவிலான்குளம் காவல்நிலையக்குற்ற எண்.92/2016 ச/பி.294(பி), 323, 506(1) இதச மற்றும் தமிழ்நாடு பெண்கள் துன்புறுத்தல் தடைச்சட்டம் பிரிவு 4ன் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றையதினமே சங்கரன்கோவில் அரசு மருத்துவமனை சென்று காயச்சான்றை பெற்று அரசு உதவி மருத்துவர் வெள்ளைச்சாமி என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். மற்ற அரசு தரப்பு பட்டியல் சாட்சிகளையும் அன்றையதினமே விசாரித்தபோது அவர்கள் இவ்வழக்கின் முந்தைய விசாரணை அதிகாரியான சிறப்பி உதவி ஆய்வாளர் மாரியப்பனிடம் தெரிவித்ததுபோல என்னிடமும் தெரிவித்ததால் அவர்களது வாக்குமூலத்தை மீண்டும் பதிவுசெய்யவில்லை. அன்றைய தினமே 1ம்

எதிரிக்கு எதிராக ச/பி.294(பி), 325, 506(1) இதச ன் கீழும், 2ம் எதிரிக்கு எதிராக ச/பி. 294(பி), 323, 506(1) இதச மற்றும் தமிழ்நாடு பெண்கள் துன்புறுத்தல் தடைச்சட்டம் பிரிவு 4ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

எனது விசாரணையில் அ.சா3 முத்துராஜ் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாக துலங்குமா என்றால் துலங்காது. காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் வெள்ளச்சாமியை விசாரணை செய்ததாக சொல்லப்படும் தேதியானது 08.10.2016லிருந்து 01.10.2016 ஆக திருத்தப்பட்டுள்ளது என்றால் 08.10.2016 அன்றுதான் மருத்துவர் விசாரிக்கப்பட்டார். அந்த திருத்தம் தவறுதலாக செய்யப்பட்டுவிட்டது. அ.சா.ஆ.3 ஆவணத்தில் காயம்பட்ட நபராக சொல்லப்படும் பூரணம் 07.06.2016ம் தேதி காலை 11.40 மணிக்கு சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு சென்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மருத்துவர் வெள்ளச்சாமியிடம் நான் பதிவுசெய்த வாக்குமூலத்தில் பூரணம் 07.09.2016ம் தேதி 11.40 மணிக்கு சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு சென்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.ஆ.3 ஆவணம் நீதிமனறத்தில் 19.12.2018 அன்று சமர்ப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். அ.சா.ஆ.3 ஆவணம் காலதாமதமாக நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டதற்கான காரணம் எனது விசாரணையில் துலங்குமா என்றால் துலங்காது. அ.சா.ஆ.3 ஆவணம் கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டதால் அது தாமதமாக நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. மருத்துவர் என்னிடம் அளித்த வாக்குமூலத்தில் காயம்பட்ட பூரணத்தை 5 தெரிந்த நபர்கள் (3 பெண்கள், 2 ஆண்கள்) தாக்கியதாக பூரணம் மருத்துவரிடம் தெரிவித்ததாக என்னிடம் கூறினாரா என்றால் இல்லை. 1 பெண்ணும், 2 ஆண்களும் சேர்ந்து தாக்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. நான் முதல் விசாரணையில் கூறிய நாள் நேரத்தில் காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவரை விசாரணை செய்யவில்லை என்றாலும், அவரிடமிருந்து காயச்சான்று பெறவில்லை என்றாலும், இவ்வழக்கின் முந்தைய விசாரண அதிகாரியான மாரியப்பன் என்பவரை சரிவர விசாரணை செய்யவில்லை என்றாலும், எனது விசாரணை ஒருதலைபட்சமானது என்றாலும், எதிரிகளுக்கும்,

இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**